

கரூர் மாநகராட்சி வார்டு எண் 25க்கு உட்பட்ட பகுதிகளுக்கு ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல், மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், துணை மேயர் தாரணி சரவணன், ஆணையர் சுதா, மண்டல குழு தலைவர்கள் எஸ்.பி. கனகராஜ், ஆர்.எஸ்.ராஜா, அன்பரசன், ஜோதிபாசு உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள் அருகில் உள்ளனர்.

# திருச்சி தெற்கு மாவட்ட - மாநகரக் கழகக் கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை!

திருச்சி, ஆக.23-

திருச்சி தெற்கு மாவட்ட மாநகர கழக கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் மாநகர அவைத் தலைவர் நூர்கான் தலைமையில்,

மாநகர கழக செயலாளர் மு.மதிவாணன், முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**இரங்கல் தீர்மானம்**

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த மகன் மு.க.முத்து அவர்களின் மறைவு, 47வது வட்ட கழக செயலாளர் நாகவேணி மாரிமுத்து அவர்களின் தாயார் வே.ஆரியமாலை மறைவு, 12வது வட்ட கழக செயலாளர் சிவகுமார் அவர்களின் தாயார் ஞானம்பாள் மறைவு மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 31வது மாமன்ற உறுப்பினர் சுஜாதா அவர்களின் மறைவிற்கும் இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கின்றது. அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக ஒரு நிமிடம் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறன்.

**பொது தீர்மானம்**

ஐம்பது ஆண்டு காலமாக பொது வாழ்க்கைக்கு சொந்தக்காரர், தியாக செம்மல் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தான் செல்லும் எல்லா இடங்களிலும் ஒருமையில் பேசும் தற்குறி எடப்பாடியை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கின்றது.

திருச்சி தெற்கு மாவட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையில் 40% இலக்கை அடைவதற்கு பலமுறை களத்திற்கு சென்று மக்களை சந்தித்து உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டு கழக நிர்வாகிகளிடம் அனுதினமும் தொலைபேசியில் உரையாடி இலக்கை அடைவதற்கு உறுதுணையாக இருந்த மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் பகுதி, வட்ட கழக செயலாளர்கள், மற்றும் கழக நிர்வாகிகள் BLA2, BDA அவர்களுக்கும் இக்கூட்டத்தில் நன்றி தெரிவித்து மற்றும் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றது.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது இல்லற வாழ்க்கையில் 50வது ஆண்டுகளை கடந்து பொது வாழ்க்கையிலும் இல்லற வாழ்க்கையிலும் சிறப்பாக பணியாற்றுகின்றார் அவருக்கு இக்கூட்டமானது தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

இக்கூட்டத்தில் மாநகரக் கழக நிர்வாகிகள் சந்திரமோகன், தமிழ்ச்செல்வன், பொன் செல்லையா, சரோஜினி, பகுதி கழகச் செயலாளர்கள் நீலமேகம், மோகன், பாபு, விஜயகுமார், ராஜ் முஹம்மத், மணிவேல், சிவக்குமார், நகர கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நகர அணி அமைப்பாளர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக நகராட்சி மன்ற உறுப்பினர்கள் நகர வார்டு செயலாளர்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கோயம்புத்தூர் மாவட்டம், பில்லூர் அணையை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (திருப்பூர்) டாக்டர் மனிஷ் நாரணவரே, (கோயம்புத்தூர்) பவன்குமார் க.கிரியப்பனவர், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, துணை செயலாளர்கள் அசோக் பாபு, செந்தில், கூடலூர் நகர்மன்ற தலைவர் அறிவரசு, ஒன்றியச் செயலாளர் பிரதீப், பல்லடம் நகர செயலாளர் ந.ராஜேந்திரகுமார், பொங்கலூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜே.சி.பி.எஸ்.பாலுச்சாமி, கண்காணிப்பு பொறியாளர் செல்வகுமார், நிர்வாக பொறியாளர் கே.பட்டன் ஆகியோர் உள்ளனர்.

### முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம் வாயிலாக – கரூரில்

# முன்னாள் படை வீரர்கள் நலனுக்கு ரூ.14.22 இலட்சம்!

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

கரூர்.ஆக.23-

“முதல்வரின் காக்கும் கரங்கள்” திட்டத்தின் வாயிலாக முன்னாள் படைவீரர்களின் நலனுக்காக 30 விழுக்காடு மூலதன மானிய தொகை ரூ. 14.22 இலட்சம் கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

கரூர் மாநகராட்சியில் வார்டு எண் 25பகுதிக்கு சின்ன கொங்கு மண்டபத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடைபெற்றது. கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமை வகித்தார். ‘முதல்வரின் காக்கும் கரங்கள்’ திட்டத்தின்கீழ் முன்னாள் படைவீரர்களின் நலனுக்காக 30 விழுக்காடு மூலதன மானிய தொகையாக ரூ.14.22 லட்சம், மேலும் முகாமில் 21 பயனாளிகளுக்கு ரூ 1.50 லட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

பின்னர் வி.செந்தில் பாலாஜி கூறியதாவது

கரூர் மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமானது 179 இடங்களில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு 71 முகாம்கள் நிறைவு பெற்றுள்ளது. இதுவரை 57.523 மனுக்கள் வரப்பெற்றுள்ளன. இதில் 20.830 மனுக்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரிய விண்ணப்பங்கள் ஆகும்.

‘முதல்வரின் காக்கும் கரங்கள்’ திட்டம் வாயிலாக முன்னாள் படைவீரர்களின் நலனுக்காக 30 விழுக்காடு மூலதன மானியமாக பயனாளிகளுக்கு திட்டத் தொகையாக ரூ. 14.22 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன். துணை மேயர் ப.சரவணன், மாநகராட்சி ஆணையர் சுதா, கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல்.சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் பிரகாசம், மண்டல குழு தலைவர்கள் எஸ்.பி. கனகராஜ், ஆர்.எஸ்.ராஜா மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட

### முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



திண்டுக்கல் பகுதி-3,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



துறையூர் மத்திய ஒன்றியம்,
திருச்சி வடக்கு மாவட்டம்.



கோட்டூர் வடக்கு ஒன்றியம்,
திருவாரூர் மாவட்டம்.



நங்கவள்ளி வடக்கு ஒன்றியம்,
சேலம் மேற்கு மாவட்டம்.



கடத்தூர் கிழக்கு ஒன்றியம்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



பல்லாவரம் வடக்குப் பகுதி,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.



புதுப்பாளையம் கிழக்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



ஆரல்வாய்மொழி பேரூர்,
கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்.



கிணத்துக்கடவு மேற்கு ஒன்றியம்,
கோவை தெற்கு மாவட்டம்.